# சகல அரசியல் கைதிகளும் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும்!

## கஜேந்திரன் எம்.பி. கோரிக்கை



அரசியல்கைதிகள்அனைவரும்உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கொழும்பு – மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள்அரசியல்கைதி செ.ஆனந்தவர்னன் எனப்படும் அரவிந்தனை நேற்றுப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபாதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 04 புதன்கிழமை 17.04.2024 கதிர் 232

## திருட்டு, கொள்ளை, வாகனம் கடத்தல் ஆகிய குற்றங்களை தடுக்க விசேட பொலிஸ் பிரிவொன்றை களத்தில் இறக்குவதற்கு ஏற்பாடு!

### ‘சூம்’ மூலம் பொலிஸ் அதிகாரிகளுக்கு பொலிஸ் மா அதிபர் விளக்கமளிப்பு



வீடுகளில் நிகழும் திருட்டு சம்பவங்கள்,கொள்ளையிடல் மற்றும் வாகனம் கடத்தல் போன்ற வன்முறைக் குற்றங்களை ஒடுக்குவதற்காக நாடு முழுவதும் 03 மாத பாரிய நடவடிக்கையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களை தயாரித்து மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக தன்னிடம் ஒப்படைக்குமாறு 45 பொலிஸ் பிரிவுகளின் பொறுப்பதிகாரிகளுக்கு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

நாட்டில் இழைக்கப்படும் குற்றங்களில் 32 வீதமானவை வன்கொடுமை குற்றப் பிரிவைச் சேர்ந்தவை எனவும், அதனை அடக்கி, பொதுமக்கள் அச்சமோ சந்தேகமோ இன்றி நிம்மதியாக வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும் எனவும் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

புத்தாண்டு பிறப்பின் பின்னர் நேற்று சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் 640 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் , பிரிவுகளுக்குப் பொறுப்பான

2

## விவாதச் சவாலை ஏற்காத ஜே.வி.பியினர் ஏதேதோ பிதற்றியவாறு நழுவுகின்றனர்!

### கனடாவில் ‘சொறி’ சொன்னால் போதாது என்கிறார் ஹர்ஷன ராஜகருணா எம்.பி.



தமது கட்சியின் பொருளாதாரக் குழுவுடன் விவாதத்திற்கு வருமாறு விடுத்த சவாலுக்கு பதிலளிக்காமல் ஜே.வி.பி தொடர்ந்தும் நழுவல் போக்கில் இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று (16) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் உரையாற்றிய ஹர்ஷன ராஜகருணா கூறியதாவது:

இந்த நாட்டு மக்கள் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பின் மத்தியிலேயே மிகுந்த சிரமத்துடன் இம்முறை புத்தாண்டை கொண்டாடினர். இத்தகையவொர் நிலையில் மக்களின் பொருளாதார பிரச்சினைகள் தொடர்பில் நமது பொருளாதார குழுவுடன் விவாதிப்பதற்கு முன்வருமாறு ஜேவிபிக்கு அழைப்பு விடுத்தோம்.

அதற்கு அனுர - சஜித் விவாதமே சிறந்தது

2

## கொழும்புத் தேசிய வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு வகைகள் தரமற்றதாக உள்ளன!

### பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ருக்ஷான் பெல்லன குற்றச்சாட்டு



கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு வழங்கப்படும் கணிசமான அளவு உலர் உணவு வகைகள் தரமற்றதாகவும் பூஞ்சனமுமாய் இருப்பதாக அதன் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ருக்ஷான் பெல்லன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக இருபது வருடங்களாக இதே சம்பிரதாயமே தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். இது தொடர்பில் விடயம் தொடர்பான

2

## தேர்தலுக்கான வைப்புத் தொகை அதிகரிப்பானது அரசியலமைப்பு உரிமையை மீறுவதாக உள்ளது!

### மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு



தேர்தலுக்கான வைப்புத் தொகையை அதிகரிக்க அரசாங்கம் எடுத்த முடிவு, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அரசியலமைப்பு உரிமையை மீறுவதாக அமைந்துள்ளது என தெரிவித்து இலஞ்சம், ஊழல் மற்றும் வீண்விரயத்திற்கு எதிரான மக்கள் சக்தி அமைப்பு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின் போது அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர்

2

## சுகாதார அமைச்சுக்கு சொந்தமான 679 வாகனங்களுக்கு என்ன நடந்தது என்பது எவருக்கும் தெரியவில்லையாம்!

### அனைத்தும் மாயமாகிவிட்டதாக கணக்காய்வு அறிக்கை தெரிவிப்பு

*சுகாதார அமைச்சுக்கு சொந்தமான 679 வாகனங்கள் குறித்த தகவல்கள் அனைத்தும் மாயமாகியுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.*

*2019 ஆம் ஆண்டு அந்த அலுவலகம் நடத்திய விசேட கணக்காய்வு ஒன்றின் போதே, சுகாதார அமைச்சுக்கு சொந்தமான இந்த வாகனங்கள் மயமாகியமை பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. இவற்றில் 240 வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு கணக்காய்வு அலுவலகத்திற்கு அறிவித்துள்ள போதிலும், இதனை உறுதிப்படுத்தும் வகையில் போதிய தகவல்களை அமைச்சு வழங்கத் தவறியுள்ளதாக கணக்காய்வு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.*

*தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள வருடாந்த கணக்காய்வு அறிக்கையின்படி, ஏனைய 439 வாகனங்கள் குறித்து நான்கு ஆண்டுகளாக எந்த தகவலும் கிடைக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ரெசி-72)*

## காலி முகத்திடல் போராட்டக் கோரிக்கைகளை முன்னிறுத்தி அரசியல் கூட்டு அமைக்க முஸ்தீபு

மக்கள் போராட்ட அபிலாஷைகளின் அடிப்படையில் அரசியல் கூட்டணியொன்றை உருவாக்குவது தொடர்பில் பல தரப்பினரும் கவனம் செலுத்தி வருவதாக கூறப்படுகின்றது. இதன்படி, இது தொடர்பில் அரசியல் கட்சி குழுக்களிடையே கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள்ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமா செய்வதற்கு சில நாட்களுக்கு முன்னர், கொழும்பு காலி முகத்திடலில் ஒன்றுகூடி முன்வைக்கப்பட்ட மக்கள் போராட்டத்தின் கோரிக்கைகளை முன்னிறுத்தி இந்தக் கூட்டணி அமையும் எனவும் அரசியல் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நெருங்கும் நேரங்களில் உருவாகின்ற சந்தர்ப்பவாத அரசியல் கூட்டணி போல் அல்லாமல் மக்களது நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அமைக்கப்படும் ஜனரஞ்சகக் கூட்டணியாக இது அமையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நடைபெறப்போவது எந்த தேர்தல் என்பது இந்த கூட்டணிக்கு பிரச்சினை அல்ல,

2

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## சகல அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“முன்னாள்போராளிசெல்வநாயகம்ஆனந்தவர்ணன் கடந்த 2024.03.26 இல் கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டு அன்றைய தினமே கைது செய்யப்பட்டு கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் வெலிக்கடையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரது முகநூலில் கடந்த 2020 இல் ஒரு படமும் 2022 இல் ஒருபடமும் பகிரப்பட்டன எனவும், அதன் மூலம் புலிகளை மீளுருவாக்கம் செய்ய அவர் முயற்சிக்கின்றார் எனவும் பொய்க் குற்றச்சாட்டைச் சுமத்தி அவரைத் தடுத்துவைத்துள்ளனர். ஏற்கனவே அவர் சுமார் 9 ஆண்டுகள் கொடிய சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கும் பல பொய் வழக்குகளுக்கும் முகம் கொடுத்து விடுதலையாகி தனது பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த நிலையில் மீண்டும் கைது செய்யப்பட்டு கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அடைகக்கப்பட்டுள்ளார்.

அடிப்படைவசதிகள்மிகவும்மோசமாகவுள்ளசிறையில் ஆனந்தவர்ணன் அடைத்துவைக்கப்பட்டுள்ளார்.

அவர் அடைத்து வைக்கப்பட்டுள்ள மகசின் சிறைச்சாலையில் அவரைச் சந்தித்து உரையாடியிருந்தேன்.

சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் விடுதலைப்புலிகள் இயக்கச் சீருடையில் உள்ள படத்தை முகநூலில் பகிர்ந்ததாகக் குற்றம் சுமத்தி அதன் மூலம் புலிகளை மீளுருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டதாகவும் குற்றம் சுமத்தி தன்னைக் கைது செய்து அடைத்துள்ளனர் என்று தெரிவித்தார்.

மேலும் அடுத்த தடவை எப்போது நீதிமன்றில் முற்படுத்துவார்கள் என்ற திகதி கூடத் தெரியாத நிலையில் தன்னைத் தடுத்து வைத்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

தன்னைக் கைது செய்து அடைத்துள்ளமையால் தனது பிள்ளைகள் அநாதரவான நிலையில் இருக்கின்றனர் எனவும், தனது விடுதலைக்கு அழுத்தம் கொடுக்குமாறும் மிகுந்த வேதனையுடன் அவர் கோரினார்.

கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டம் தமிழர்களது குரல்வளையை நசுக்கி தமிழர்களைத் தமது கொத்தடிமைகளாக வைத்துக் கொள்வதற்கான எல்லையற்ற அதிகாரத்தைப் பொலிஸாருக்கு வழங்கியுள்ளது. பொலிஸார் இனவாதமாகவே செயற்படுகின்றார்கள்.

புலிகள் மீளுருவாக்கம் என்ற பொய்க் குற்றச்சாட்டுக்களின் கீழ் ஆனந்தவர்ணன் கைது செய்யப்பட்டுள்ளமையை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஆனந்தவர்ணன் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். அத்துடன் கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்படல் வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றோம். அந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமெனவும் கோருகின்றோம்.” - என்றார்.

(அ)

## திருட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகாரிகள்,பிரதி பொலிஸ் மா அதிபர்கள், மற்றும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள் ஆகியோருடன் சம காலத்தில் உரையாடினார்.

காவல்துறையினரின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்கும் முகமாவே பொலிஸ் மா அதிபர் இந்த சந்திப்பை மேற்கொண்டிருந்தார்.

இந்த கலந்துரையாடலின் போது பொலிஸ் மா அதிபர் கருத்து தெரிவிக்கையில் - “மக்களைக் கொன்று விட்டு தப்பிச் செல்ல முயற்சிக்கும் பாதாள உலகக் குற்றவாளிகளை துரத்தித் தாக்கி அவர்களை அழிக்கும் வகையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் திறமையான 100 உத்தியோகத்தர்களைக் கொண்ட விசேட மோட்டார் சைக்கிள் பிரிவு இந்த வார இறுதிக்குள் நியமிக்கப்படும்.

குறித்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தமது பயிற்சிகளை நிறைவு செய்துள்ளதுடன், இந்த தாக்குதல் பிரிவுக்கான விசேட சீருடை, நவீன ஆயுதங்கள் மற்றும் 50 அதிவேக ட்ரெயில் மோட்டார் சைக்கிள்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், பாதாள உலக குழுக்களை அடக்க பயன்படுத்தப்பட்ட பொலிஸாரை உள்ளடக்கிய 20 விசேட பொலிஸ் பிரிவுகளை மேலும் பலப்படுத்தி அப்பிரிவுகளை 30 ஆக திட்டம் வகுக்கப்பட்டுள்ளது” என்றார்.

இதேவேளை, குற்றச்செயல்களை ஒடுக்குவதற்காக கொழும்பு பிரதேசத்தில் உள்ள தனியார் நிறுவனங்கள் மற்றும் வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள சுமார் 2000 சி.சி.டி.வி. கமராக்களை பொலிஸ் திணைக்களத்தின் சி.சி.டி.வி. கமரா கட்டமைப்புடன் ஒன்றிணைப்பதற்கும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் உயர் அதிகாரிகளிடம் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

பரீட்சார்த்த முயற்சியாக முதலாவதாக கொழும்பு நகரில் இந்த செயற்பாடு அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் அதன் பின்னர் நாடளாவிய ரீதியில் இதனை அமுல்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் இங்கு மேலும் தெரிவித்தார்.

(ரெசி-67)

## விவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என ஜே.வி.பி. கூறியது, சரி அதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். மேலும் எங்களது பொருளாதாரக் குழுவும் விவாதத்திற்கு தயாராக உள்ளது. ஆனால் ஜேவிபி யினர் இந்த சவாலிலிருந்து தப்பிச்செல்ல ஏதேதோ பிதற்றல்களை கூறுகின்றனர்.

சஜித் பிரேமதாச தனித்து ஆட்சி நடத்த முடியாது, அவ்வாறே அனுரகுமாரவும் தனித்து ஆட்சி நடத்த முடியாது. நல்லதொரு ஆட்சியை நடத்துவதற்கு நேர்மையான ஒரு தலைவருடன் திறமையான அணியும் இருக்க வேண்டும். சஜித் பிரேமதாசவுடன் அவ்வாறான சிறந்தவொரு அணியாக நாங்கள் உள்ளோம்.

எனவே, நமது ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழுவுடன் விவாதிக்க வருமாறு மீண்டும் ஜேவிபியை கேட்டுக் கொள்கின்றோம். மேலும், தேவைப்பட்டால் அனுர-சஜித்துடன் விவாதம் தேவையென்றால் அதற்கும் தயாராக உள்ளோம். புலிகள் செய்த அழிவுகளைப் போலவே இன்னும் அதிகமான அழிவுகளை ஜே.வி.பியும் செய்தது. அதற்காக கனடா சென்று ‘சொறி’ சொன்னால் மட்டும் எதுவும் நடக்கப் போவதில்லை.

(ரெசி-68)

## தேர்தலுக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பந்துல குணவர்தன தேர்தலுக்கான வைப்புப் பணத்தை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவித்திருந்தார். அதற்கமைய, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடக்கூடிய பதிவு செய்யப்பட்ட கட்சியொன்றின் வேட்பாளருக்கு ரூ. 50,000 ஆக இருந்த வைப்புத் தொகையை ரூ.26,00000 லட்சம் ஆகவும், சுயேட்சை வேட்பாளர் ஒருவருக்கு ரூ.75,000 ஆக இருந்த வைப்புத் தொகையை ரூ.31 லட்சம் ஆகவும் உயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அவ்வாறே, பொதுத் தேர்தலின் போது பதிவு செய்யப்பட்ட கட்சியின் வேட்பாளருக்கு ரூ. 11,000, சுயேட்சை வேட்பாளருக்கு ரூ.16,000 மற்றும் உள்ளூராட்சி சபை தேர்தலின் போது பதிவு செய்யப்பட்ட கட்சியின் வேட்பாளருக்கு ரூ. 6000, சுயேட்சை வேட்பாளருக்கு ரூ.11,000 என வைப்புத் தொகையில் பாரிய அதிகரிப்பை மேற்கொள்ள அமைச்சரவை தீர்மானித்திருந்தது.

இத்தகைய அநீதியான வகையிலான வைப்புப் பணத் தொகை அதிகரிப்பால், பண வசதி உள்ள ஒரு குழுவினரே எதிர்வரும் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படுவதுடன், நாட்டின் சாதாரண குடிமக்களுக்கு தேர்தலில் போட்டியிடும் உரிமையயை இது பறித்துள்ளதாகவும் குறிப்பிட்டே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளதாக இலஞ்சம், ஊழல் மற்றும் வீண்விரயத்திற்கு எதிரான மக்கள் சக்தி அமைப்பின் தலைவர் ஜமுனி கமந்த துஷார தெரிவித்தார்.

(ரெசி-70)

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பணிப்பாளர்களிடம் பல தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்டும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை என மருத்துவர் பெல்லன குறிப்பிட்டுள்ளார். நோயாளிகளுக்கு வழங்கப்படும் உலர் உணவுகளில் கணிசமான அளவு அழுகியுள்ளதாகவும் அவற்றில் சில பூஞ்சனம் மிக்கதாய் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த உணவுவகைகளை கொள்வனவு செய்வதற்காக மாதாந்தம் எழுநூற்று அறுபது (760) லட்சம் ஷரூபா விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்படுவதாகவும், உணவு வகைகள் குறித்து புகார் செய்யப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் குறித்த நிறுவனம் தரமான உலர் உணவுகளை வழங்குவதாகவும், ஆனால் சில தினங்களின் பின்னர் மீண்டும் பழையபடி தரமற்ற உணவுகளையே அவர்கள் வழங்குவதாகவும் மருத்துவர் ருக்ஷான் பெல்லன மேலும் தெரிவித்துள்ளார். (ரெசி-71)

## காலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் தேர்தல் பற்றி இன்று பேசப்பட்டாலும் அடுத்த ஆண்டு வரை தேர்தலை நடத்தாமல் இருப்பதே அரசின் முயற்சி என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முதலாளித்துவக் கட்சிகள் ஓர் அணியாக குழு சேர்வது போல், அதற்கு மாற்றாக ஒருமித்த கருத்துக்களையுடைய மக்கள் குழுவை உருவாக்குவதே இந்த முயற்சியின் நோக்கம் எனவும் குறித்த பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ரெசி-69)





செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட maalaikkathir@gmail.com

# மடத்தடி மீனாட்சி அம்மன் துவி அலங்கார உற்சவம்



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் துவி வருடாந்த அலங்கார உற்சவம் சிறப்பாக இடம்பெற்று வருகிறது.

இரண்டாவது அலங்கார உற்சவம் புதுவருடத்தில் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது .

உற்சவகால பிரதம குரு சிவாகம வித்யா பூஷணம் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் ஆலய குரு சிவஸ்ரீ ச.கோவர்த்தன சர்மா சமுகத்தில் வருஷாபிஷேக கிரியைகள் யாவும் நடைபெற்று வருகின்றன.

தொடர்ச்சியாக ஒன்பது தினங்கள் பகல் அலங்கார உற்சவ திருவிழாக்கள் இடம்பெற்று, எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சித்ராப் பௌர்ணமி அன்று தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது .

19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாற்குட பவனி இடம் பெற ஏற்பாடாகி உள்ளது.

இந்த பத்து நாள் அலங்கார உற்சவ திருவிழாக்காலங்களில் காலை 10 மணிக்கு கும்ப பூசையுடன் ஆரம்பமாகி பகல் ஒரு மணிக்கு அலங்கார உற்சவ பிரதான பூசை, அம்பாளின் வீதியுலா ஆகியன இடம்பெறுகின்றன.

அதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு தினமும் அன்னதானம் வழங்கப்படுகிறது.

தேசத்து ஆலயமாக விளங்குவதால் பத்துத் தினங்களுக்கான உற்சவ காலத் திருவிழாக்களையும் அன்ன தானத்தையும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களான சம்மாந்துறை, விநாயகபுரம், பொத்துவில், ஆலையடிவேம்பு, நாவிதன்வெளி, கல்முனை, காரைதீவு, நிந்தவூ,ர் திருக்கோவில் ஆகிய கிராமங்கள் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றன.

# கற்பிட்டி அல் அக்ஸா பாடசாலை சிரமதானப் பணி முன்னெடுப்பு!



(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் முன்னெடுக்கப்பட்ட சிரமதான பணி பாடசாலையின் பிரதி அதிபர் எஸ்.எப் சாஜினாஸ் தலைமையில் இடம்பெற்றது.

பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் என்பன முழுமையான பங்களிப்பை வழங்கியதுடன் பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பழைய மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் இச்சிரமதானப் பணியில் கலந்து கொண்டு தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர்.

அல் அக்ஸா தேசிய பாடசாலையின் சுற்றுப்புறச் சூழலை முழுமையாக சுத்தப்படுத்தி, நீண்ட விடுமுறையின் பின் பாடசாலைக்கு சமுகமளிக்கும் மாணவர்களின் மனங்களில் புத்துணர்ச்சியும் உத்வேகமும் ஏற்படச் செய்யும் வகையில் பாடசாலையின் சுற்றுப்புறச் சூழலை சிரமதானத்தின் ஊடக ஏற்படுத்தித் தந்தமைக்கு பாடசாலையின் நிர்வாகம் சார்பாக இச்சிரமதான பணியில் பங்குபற்றிய மற்றும் இதற்கு உதவிகள் ஒத்தாசைகள் வழங்கிய சகலருக்கும் தமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதாக பிரதி அதிபர் எஸ் எம் சாஜினாஸ் தெரிவித்தார்.



# மிதி வெடி




எங்கட ஆக்களின்ர மனநிலையால தான் நாங்கள் இன்னும் இப்பிடியே இருக்கிறம் பாருங்கோ!

"நான் பிடிச்ச முயலுக்கு மூண்டு கால்தான். நான் சொல்லுறபடி கேக்கிறதெண்டா கேளுங்கோ" இல்லாட்டி வந்து பாக்கத்தான் போறியள் எண்டா ஒருகால முறிச்சுப் போட்டுட்டெண்டாலும் நான் சொன்னது தான் சரி - செய்ததுதான் சரி எண்டு நிஷரூபிப்பன்!"

பாவம் அந்த முயலுக்கு வலிக்குமே? அப்பிடிச் செய்யுற-தால ஆருக்கென்ன லாபம்? அந்தக் கதைக்கெல்லாம் இடமில்லை.

நாங்கள் மாட்டம் எண்டா, எந்தக் கொம்பன் நினைச்-சாலும் முடியாது. அதுக்காக என்ன வேணுமெண்டாலும் செய்வம்..!

இந்தக் கணக்காத்தான் வவுனியாவில நிலைமையிருக்குது. வவுனியாவில மட்டும் இல்லை பெரும்பாலும் வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் அதிகாரிகள் மனநிலை அப்பிடித் தான் கிடக்குது.

சும்மா சொல்லப்படாது, இக்கட்டான சூழ்நிலை வரேக்க சிங்கள அதிகாரிகள் தங்கட சனத்துக்காகச் செய்யுறதுகளைப் பாக்கேக்க எங்கட அதிகாரிகள் எங்களுகுச் செய்யுற-தைப் பாத்தால் வெக்கப்படவேண்டிக் கிடக்குது.

இலங்கையில யுத்தம் எண்டது தவிர்க்க முடியாத்தொண்டாகிப்போய் எத்தனை பேருக்கு எத்தனை இழப்புகள்? சண்டையில சம்பந்தப்பட்ட ரெண்டு தரப்பாகட்டும், அப்பாவிச் சனமாகட்டும் மாட்டுப்பட்டு அங்கவீனர்களாகிப் போனது தவிர்க்க முடியாதது.

அப்பிடிக் காயம் பட்டவர்களுக்கு ஒரு நம்பிக்கையைக் குடுத்து வாழ வைக்கிற பொறுப்பு எங்கள் எல்லாருக்கும் இருக்குத் தானே? சிங்கள அதிகாரிகள் அப்பிடியான வேலையளை மனச்சாட்சிப் படி செய்யினம்.

ஆனா எங்கட ஆக்கள் தாங்களாச் செய்யினமும் இல்லை. ஞாயத்தைக் கேட்டு, மேன்முறையீடு செய்து தங்களுக்குக் கிடைக்க வேண்டியதைக் கேட்ட அப்பாவிகளைப் பழிவாங்கிறதை மட்டும் சரியாச் செய்யினம்!

கடைசிச் சண்டையில காயம் பட்ட பிள்ளை ஒண்டு, தன்ர முயற்சியால படிச்சுப் பட்டதாரியாகி, படிப்புக்கேத்த உத்தியோகம் ஒண்டும் எடுத்துப்போட்டு, ஊருக்குள்ள பஸ் வருகுதில்லை எண்டு சட்டப்படி "லைசென்ஸ்" எடுக்க விண்ணப்பிக்க வவுனியாவில இருக்கிற அதிகாரி-கள் மாட்டம் எண்டு சொன்னதும், அது ஜனாதிபதி செயலகம் வரை போய் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு "லைசென்ஸ்" குடுத்துப்போட்டு ஒரு மாதத்துக்குள்ள அறிவியுங்கோ!, எண்டு ஜனாதிபதின்ர செயலாளர் உத்தரவு போட்டது பற்றியும் அறிஞ்சிருப்பியள்.

அந்தக் கடிதத்தின்ர பிரதி ஒண்டு சம்பந்தப்பட்ட பிள்ளைக்கும் அனுப்புப்பட்டிருக்கு. ஜனாதிபதி குடுத்த கடிதத்துக்கும் காரியம் ஆகேல்ல. "அவரென்ன எங்களுக்குச் சொலலுறதெண்டோ. சட்டப்படி தானே குடுக்கச் சொல்லியிருக்கு அப்பிடிக் குடுக்க நாங்கள் "ரெடி" இல்லை எண்டு நினைச்சினமோ தெரியா, குறிக்கப்பட்ட நாளுக்குள்ள எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவிக்கப்படேல்ல. இது பற்றிக் கேக்கப் போன பிள்ளைக்கு முகத்தில அடிச்ச போலப் பதில் "அப்பிடி ஒரு கடி-தமும் எங்களுக்கு வரேல்ல" கடிதத்தைக் காட்ட, "உங்களுக்கு வந்திருந்தா அங்கயே போய் எடுங்கோ"

தரமாட்டினம் எண்டு சொன்னவை எண்டு தன்ர நியாயத்தை எழுதின பிள்ளைக்கு, எழுதின கடிதத்துக்குப் நடவடிக்கை எடுபடேல்ல எண்டு சொல்லத் தெரியாதே?

திரும்பவும் ஜனாதிபதி செயலகத்தில இருந்து கடிதம், அதுவும் ஒண்டில்ல. ரெண்டு கடிதம். உடனடியா நடவடிக்கை எடுக்க வேணும் எண்டு உத்தரவு.

என்ன சொன்னாலும் நாங்கள் அசர மாட்டம் பாருங்கோ. சட்டப்படி எல்லாம் செய்வம். சட்டப்படி அவவுக்கு "லைசென்ஸ்" குடுக்கேலாது எண்டு "ப்ஷரூவ்" பண்ணினாப் போச்சு எண்டுட்டு அந்தப் பிள்ளையைக் கூப்பிட்டு "ஓர்தோபற்றிக் டொக்டரிற்றை" உமக்கு "லைசென்ஸ்" குடுக்கலாம் எண்டு "மெடிக்கல்" வாங்கிக் கொண்டு வாரும் எண்டு அனுப்பியிருக்கினம்.

அது மட்டுமில்லை, மற்றப்பக்கத்தில ஆசுப்பத்திரிக்காரரிட்டை "கோல்" பண்ணி "இன்ன பேர்வழிக்கு "லைசென்ஸ்" குடுக்கேலா, அப்பிடி இல்லையெண்டு நீங்கள் "ரெக்கமன்ற்" பண்ணிதெண்டு குடுத்து, ஏதும் நடந்தால் நீங்கள்தான் பொறுப்பு!" எண்டு வெருட்டி விட்டிருக்கினம்.

பாவம் வைத்தியர் சும்மாவே வாதம் - வம்பு வழக்குகளுக்குப் போகாதவர். இப்பிடிச் சொன்ன பிறகு எப்பிடிக் கையெழுத்து வைப்பார். அவரொண்டும் நேற்றிக்கண் உள்ள சிவன் இல்லையே, மைத்துனர் தானே? மாட்டன் எண்டு சொல்லிப் போட்டார்.

வவுனியாவை விட்டால் யாழ்ப்பாணம்தானே அடுத்த ஆசுப்பத்திரி. அங்க இருந்து இங்க வந்து ஆசுப்பத்திரியில காட்டினால், அந்தப் பிள்ளைக்கு "லைசென்ஸ்" குடுக்கலாம். அதுக்காக "கிளச்" மொடல் இல்லாத மோட்டார் சைக்கிளுகள் பாவிக்கலாம், கார், "ஆட்டே கப்படுத்தி இங்கத்த "ஓர்தோபற்றிக் டொக்டர்" கடிதம் குடுத்திருக்கிறார்.

அதுக்குப் பிறகும் அந்தப்பிள்ளைய அலைக்கழிக்கிறதில எங்கட அதிகாரிகளுக்கு அலாதிப் பிரியம் போல? ஏனெண்டால் யாழ்ப்பாணத்து "ஓர்தோபற்றிக் டொக்டர்" உண்மை சொல்லுறாரோ எண்டு பார்க்க "மெடிக்கல் போர்ட்" போட்டிருக்கினமாம். அப்பப் பாருங்கோவன்?

பிள்ளை கேட்டதும் அதைத் தானே? ஒவ்வொரு நாளும் வேலைக்கு வாறதுக்கு "பஸ்" ஒழுங்கில்லை. ஒரு மோட்டார் சைக்கிள்ள வந்து போக "சட்டப்படி லைசென்ஸ்". மனமுண்டா னால் மார்க்கமுண்டு பாருங்கோ. எல்லாம் அவரவர் மனநிலையில தானே தங்கியிருக்குது?

நீங்கள் மாட்டன் எண்டு சொன்னதால தானே அந்தப்பிள்ளை அடுத்த "லெவலுக்குப்" போனது? மனிதாபிமானத்தோட, மனச்சாட்சிப்படி நீங்கள் செய்திருந்தால் ஏன் அங்க வரையும் போக வேண்டி வருகுது?

இப்பக் கூட பேப்ரில வந்தெண்டு மறிச்சுடுவினமோ எண்ட பயம் கூட இருக்குது!

முந்தினது போல ஜனாதிபதி செயலகத்தில செய்விச்சுக் குடுத்த அதிகாரியும் இப்ப அங்க இல்லை. அவர் இப்ப வடக்கில உத்தரவு பிறப்பிக்கக் கூடிய ஒரு முக்கிய அதி-காரியா இருக்கிறார். மோட்டார் போக்குவரத்து உட்பட அத்தனையும் அவருக்குக் கீழ தான். பாப்பம்.

என்ன நடக்குது எண்டு பொறுத்திருந்து தான் பாக்க வேணும்!!

-நரமுனி-

# புத்தாண்டு காலத்தின் போது நுகர்வோர் சட்டங்களை மீறிய 726 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்

## நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவிப்பு

புத்தாண்டு காலத்தின் போது விற்பனை நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது நுகர்வோர் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் பேரில் 726 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

விலை விபரங்களை காட்சிப்படுத்தாமை உள்ளிட்ட இன்னும் பல தவறுகள் காரணமாக இந்த வர்த்தகர்கள் மீது வழக்குத் தொடரப்படவுள்ளது என நுகர்வோர் விவகார அதிகார சபையின் விசேட சோதனை விசாரணைப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. இந்த பிரத்தியேக சோதனை பிரிவினரால் கடந்த காலங்களில் நாடு முழுவதும் 7,627 இடங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெசி-65)

# வீடொன்றில் சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 50,000 மதுபான போத்தல்களுடன் வர்த்தகர் ஒருவர் கைதானார்

தமிழ் - சிங்கள புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது விற்பனை செய்வதற்காக சொகுசு வீடொன்றில் சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 9,000 லீற்றர் மதுபானம் அடங்கிய 50,000 மதுபான போத்தல்களுடன் வர்த்தகர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக ஜாஎல கலால் நிலையம் தெரிவித்துள்ளது.

கலால் ஆணையர் ஜெனரல் எம். ஜி. குணசிறியின் விசேட உத்தரவின் பேரில், ஜாஎல கலால் நிலையத்தினரால் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனையில் குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன் சட்ட விரோத மது போத்தல்களும் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் பலதரப்பட்ட உயர்மட்ட சக்திகளின் உதவியுடன் குறித்த வீட்டில் நீண்டகாலமாக சட்டவிரோத மதுபான விற்பனை இடம்பெற்று வருவதாக கலால் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு கிடைத்த தகவலையடுத்தே இந்த விசேட சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு நபர் தனது வீட்டில் வைத்திருக்க அனுமதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச மதுபானத்தின் அளவு 7.05 லிட்டர் என கலால் நிலையம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெசி-64)

# அதிவேக வீதிகளின் வருமானம் 80 மில்லியனால் அதிகரிப்பு!

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருட புத்தாண்டு காலத்தில் அதிவேக வீதிகளின் வருமானம் 80 மில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன் பணிப்பாளர் நாயகம் பிரியந்த சூரியபண்டார இன்று ஊடகங்களுக்கு தவல் வழங்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வருடம் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையான 6 நாட்களில் அதிவேக வீதிகளின் வருமானம் 235 மில்லியன் ரூபாவாக பதிவாகி உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (04)

# இலங்கைக்கு மட்டும் வெங்காயம்! இந்திய அரசின் முடிவில் மாற்றம்

பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை இலங்கைக்கு மட்டும் நீக்க இந்தியா தீர்மானித்துள்ளது.

இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதன்படி 10,000 மெற்றிக் தொன் பெரிய வெங்காயத்தை இலங்கைக்கு ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்டை நாடு என்ற அடிப்படையிலும், புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தைக் கருத்திற் கொண்டும் இந்தியா இந்த தீர்மானத்தை எடுத்ததாக கூறப்படுகிறது. (04)

# வவுனியாவில் குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து நகைகள் கொள்ளை

வவுனியா நகரில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களை வழிமறித்துக் குழந்தை மீது கத்தியை வைத்துத் தாயாரை மிரட்டி நகைகள் பறித்த கொள்ளையர்கள், அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

மேற்படி சம்பவம் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனை முன்பாகவுள்ள கடவுச்சீட்டு அலுவலகத்துக்குச் செல்லும் வீதியில் இன்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வவுனியா கடவுச்சீட்டு காரியாலத்துக்கு முன்பாக விண்ணப்பப்படிவம் நிரப்பும் தொழிலில் ஈடுபட்டு வரும் பெண்மணி, தனது தொழில் நிமித்தம் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனை முன்பாகவுள்ள கடவுச்சீட்டு அலுவலகத்துக்குச் செல்லும் வீதியில் இன்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் தனது குழந்தையுடன் பயணித்த சமயத்தில் வீதியில் மறைந்து நின்ற முகமூடியணித்த மூவர், குறித்த மோட்டார் சைக்கிளை வழிமறித்து குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி அவர்கள் அணிந்திருந்த நகைகளை அபரித்தமையுடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளையும் அபகரித்துக்கொண்டு அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் உடனடியாக வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு வழங்கிய முறைப்பாட்டின் பிரகாரம் வவுனியா பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவினர் திவீர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# தேசிய மிருகக் காட்சிசாலையில் புத்தாண்டு வருமானம் ரூ.47 லட்சம்

தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையானது புத்தாண்டின் மூன்று நாட்களில் (13, 14, 15) 47 இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான வருமானத்தை ஈட்டியுள்ளதாக அதன் பிரதி பணிப்பாளர் தினுஷிகா மானவடு நேற்று (16) தெரிவித்தார்.

புத்தாண்டு விடுமுறையின் போது தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையை பார்வையிடுவதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பெருமளவிலான பார்வையாளர்கள் வருகை தந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, கடந்த 13 ஆம் திகதி ஷரூ.13 லட்சம், 14 ஆம் திகதி ரூ.16 லட்சம், 15 ஆம் திகதி ஷரூ.18 லட்சம் என வருமானத்தை உயிரியல் பூங்கா திணைக்களம் ஈட்டியுள்ளதாக பிரதி பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ரெசி-73)

# இருவேறு இடங்களில் யானை தாக்கி இருவர் பரிதாப மரணம்

இருவேறு இடங்களில் யானை தாக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளனர். தனது மகளுடன் கல்கமுவ - கல்லேவ பகுதியிலுள்ள வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவர், யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

62 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இதன்போது காயமடைந்த அவரது மகள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அத்துடன், மஹ களுகொல்லேவ பகுதியில் வயல் காணியில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி 35 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யானைகளிடமிருந்து பயிர்ச செய்கையைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (அ)

# ஐக்கிய அரபு இராச்சியத்தில் புயலுடன் வெள்ளம் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிப்பு

75 ஆண்டுகளுக்குப் பின்னர், ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட பிராந்திய நாடுகள் கடுமையான வெள்ளப் பேரழிவைச் சந்தித்துள்ளன.

இதன் காரணமாக ஓமானில் மட்டும் 18 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட பிராந்தியங்களில் பலத்த சூறாவளிக் காற்றுடன் கடும் மழை பெய்து வருகிறது. துபாய் உட்பட ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஏழு பகுதிகளிலும் வெள்ளம் பதிவாகியுள்ளது.

அத்துடன் புகழ்பெற்ற துபாய் மோல், மோல் ஒஃப் தி எமிரேட்ஸ் பகுதிகளிலும் முழங்கால் அளவுக்குத் தண்ணீர் உள்ளதுடன் அதன் மேம்பட்ட சுரங்கப்பாதை நிலையங்கள் மற்றும் சாலைகள் கூட வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதன் விளைவாக, அதிகாரிகள் இந்தப் பாதைகள் மற்றும கட்டடங்களில் இடம்பெறும் நடவடிக்கைகளை மட்டுப்படுத்த வேண்டியிருந்ததுடன் பல விமானங்கள் வேறு விமான நிலையங்களுக்குத் திருப்பி விடப்பட்டுள்ளன. மேலும் எமிரேட்ஸ் மற்றும் ப்ளைதுபாய் உள்ளிட்ட பல விமான நிறுவனங்கள் துபாய்க்கான தமது பயண நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (04)

# மியன்மரில் கைதான இலங்கையருக்கு அரச பொது மன்னிப்பு வழங்கப்பட்டது!

மியன்மரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 இலங்கை மீனவர்களுக்கு அந்நாட்டு அரசாங்கம் பொதுமன்னிப்பு வழங்கியுள்ளது. இதனை மியன்மரில் உள்ள இலங்கைத் தூதுவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த டிசம்பரில், இந்த மீனவர் குழு மியன்மர் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, பின்னர் அவர்களுக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுப்போக்கு விசேட மருத்துவர் பெற்றோருக்கு எச்சரிக்கை!

அண்மைய காலங்களில் குழந்தைகளிடையே வயிற்றுப்போக்கு நோய் குறிப்பிடத்தக்க அளவில் பரவுகின்றமையால், பெற்றோர் எச்சரிக்கையுடன் செயல்படுமாறு லேடி ரிட்ஜ்வே மருத்துவ மனையின் குழந்தை நல மருத்துவ வைத்தியர் தீபால் பெரேரா அறிவுறுத்தியுள்ளார்.

நீட்டிக்கப்பட்ட விடுமுறை நாட்களைத் தொடர்ந்து குழந்தைகளிடையே வயிற்றுப்போக்கு அதிகம் பரவி வருவதாகவும், அடிக்கடி தண்ணீருடன் மலம் வெளியேறுதல், வயிற்று வலி அல்லது பிடிப்புகள், பசியின்மை, குமட்டல் மற்றும் வாந்தி ஆகியவை இந்த நோய்க்கான அறிகுறிகளாகக் காணப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிகுறிகள் காணப்பட்டால், பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை உடனடியாக மருத்துவ சிகிச்சைக்கு அழைத்துச் செல்லுமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

பெற்றோர் குழந்தைகளுக்கு உணவளிக்கும்போதும் அதிக விழிப்புடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

இதற்கிடையில், குழந்தைகள் மத்தியில் தைபொய்ட் காய்ச்சல் பரவுவது குறித்தும் குழந்தை மருத்துவர் எச்சரித்துள்ளார்.

வயிற்றுப்போக்கு நோய் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்புக்கு இரண்டாவது முக்கிய காரணமாக உள்ளது என உலக சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

# கிழக்கில் நூற்றாண்டினை நோக்கிப் பயணிக்கும் ராமகிருஷ்ண மிஷன் – அம்பாறையில் விஸ்தரிப்பு

( வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கிலங்கையில் ராமகிருஷ்ண மிஷன் ஆரம்பித்து 98 ஆண்டுகளை பூர்த்தி செய்து 100 ஆண்டுகளை நோக்கி ஜீவ சேவையுடன் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் பொறுப்பேற்ற பிற்பாடு கிழக்கு எங்கும் பலவகையான மக்கள் மைய நலன்புரி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டத்திலும் காரைதீவை மையமாக வைத்து பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்க பட்டிருக்கின்றன.

அதற்கு முன்னோடியாக காரைதீவு ராமகிருஷ்ண மிஷன் சாரதா நலன்புரி நிலையத்தில் புதிதாக காரைதீவு மையமாகக் கொண்டு, இலவச மருத்துவ சேவைகளும் நடமாடும் கிராமிய மருத்துவ சேவைகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

பிரதி திங்கட்கிழமை, புதன்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாலை 4 மணி முதல் 6 மணிவரை இம்மருத்துவ சேவை இடம்பெற்று வருகின்றது.

அங்கு மருத்துவ ஆலோசனைகள், அடிப்படை மருத்துவப் பரிசோதனைகள், தொற்றா நோய் பற்றிய விழிப்புணர்வு, தற்கொலைத் தடுப்பு ஆலோசனைகள், போதைப்பொருள் தடுப்பு ஆலோசனைகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் இலவசமாக மருத்துவ முகாம்களை நடாத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தெரிவித்தார்.

அத்தோடு யோகப் பயிற்சிகள், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை நோக்கமாகக் கொண்ட கணினிப் பயிற்சிகள், தியான வகுப்புகள், செவ்வாய்க்கிழமை தோறும் சத்சங்க வகுப்புகள் ஆகியனவும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான உள அபிவிருத்தி தொடர்பான செயல் நிகழ்வுகளும் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளதாக சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தெரிவித்துள்ளார்.



# தமிழ் சிங்களப் புத்தாண்டு நோன்புப் பெருநாள் நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்)

தமிழ் சிங்களப் புத்தாண்டு மற்றும் நோன்புப் பெருநாளை முன்னிட்டு தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் மூவினங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் இணைந்து விசேட விருந்துபசார நிகழ்வு ஒன்றை இன்று ஏற்பாடு செய்திருந்தனர்.

குறித்த விருந்தோம்பல் நிகழ்வானது பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்றது. இதில் தமிழ், சிங்கள, இஸ்லாமிய பாரம்பரிய உணவுவகைகள்பரிமாறப்பட்டன.

மூவின சமூகங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இதில் இணைந்து உணவுப் பறிமாற்றத்தை மேற்கொண்டனர்.



சகவாழ்வு நல்லிணக்கச் செயற்பாட்டினை முன்னெடுப்பது இந்த நிகழ்வின் முக்கிய நோக்கமாகக் கொள்ளப்பட்டது.

# சாய்ந்தமருதில் நொறுக்குத் தீன் கடைகள் மீது திடீர்ப் பரிசோதனை

(எம்.எம்.றம்ஸீன்)

சாய்ந்தமருது பிரதான வீதி, உள்ளூர் வீதி மற்றும் கடற்கரை வீதி ஓரங்களில் மாலை நேரங்களில் நடத்திச் செல்லப்படும் நொறுக்குத் தீன், மரவள்ளிக் கிழங்குப்பொரியல் மற்றும் கோழி இறைச்சி சுடும் இடங்களில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அர்சத் காரியப்பர்தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர் குழுவினர் திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஸகீலா இஸ்ஸதீனுக்கு பொதுமக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மனித நுகர்விற்குப் பொருத்தமற்ற சுகாதாரமற்ற ரீதியில் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களை வைத்திருந்த வர்த்தகர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டதுடன் அவர்களது கடைகளை மூடுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.






# பாலமுனையில் க.பொ.த.சா. தர மாணவிகளுக்கான பயிற்சி நெறி

(எம்.ஏ.ஏ.அக்தார்)

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா பாலமுனை கிளை ஏற்பாட்டில் க. பொ.த சாதாரண தர மாணவிகளுக்கான ஒரு வாரகால பயிற்சி நெறியும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றன.

அகில இலங்கை ஜம்மியத்தில் உலமா சபை பாலமுனை கிளை தலைவர் அஷ்ஷெஃ அஸீஸ்ஸஹ்வி தலைமையில் அல்ஹிதாயா மகளிர் கல்லூரியில் இவை இடம்பெற்றன.

# சமூக ஒற்றுமையைச் சீரழிக்க சில சக்திகள் முயற்சி மார்க்க, அரசியல், சிவில் தலைவர்கள் ஒன்றிணையவேண்டும்!

## ஐ.ஏ.கலீலுர் ரஹ்மான் தெரிவிப்பு

(நூருல் /ஹுதா உமர்)



புனித நோன்புப்பெருநாளை கொண்டாடும்விதமாக ஸஹ்பான் மாத தலைபிறை பார்க்கும் நிகழ்வில் தீர்மானம் எடுப்பதில் இருந்த காலதாமதத்தை வைத்து முஸ்லிம் சமூகத்தினரை மீண்டும் பிளவுபடுத்தும் ஒப்பந்தச் சித்தாந்தங்களை விதைக்கும் ஒப்பந்தச் சிந்தனையாளர்களின் முயற்சிகளை மார்க்க, அரசியல் மற்றும் சிவில் தலைவர்கள் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும், என கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பின ருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக கொழும்பு பெரிய பள்ளிவாசலை முன்னிறுத்தி பிறை பார்க்கும் பணியை எமது முன்னோர்கள் கடைப்பிடித்து வருகின்றனர். அதில் இஸ்லாமிய மாத சுட்டெண்ணையும் மாதாந்தம் அவர்கள் கணித்து வருகிறார்கள்.

கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறை குழுவில் தற்போது அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை மற்றும் அரசாங்கத்தின் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அதன் வெளிப்படைத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உறுதியான மற்றும் நம்பகமான தீர்மானங்களை எடுப்பதில் உள்ள சில காலதாமதங்களை முன்வைத்து சில ஒப்பந்தச் சிந்தனையாளர்கள் முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையை சிதைத்து பிராந்திய மற்றும் பூகோள அரசியல் சதிகளை செய்ய முயற்சிக்கிறார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சில நாட்களாக சமூக ஊடகங்களில் கிழக்கு மாகாணத்தில் தனியாக பிறை பார்க்கும் குழு அமைக்கப்பட வேண்டும்!, என்று சிலர் பகிரங்கமாகவே கருத்துத் தெரிவித்து வருவதை பார்க்கும்போது சந்தேகம் வலுப்பெறுகிறது.

கொழும்பு பெரிய பள்ளிவாசலில் கூடியிருந்த தேசிய பிறைக் குழு தனது அறிவிப்பை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் முன் சிலர் தமது சொந்த சமூக வலைத்தளங்களிலும் மற்றும் முக்கியஸ்தர்கள் பலர் ஊடகங்களிலும் விமர்சித்திருந்தனர்.

சில சமூகவலைத்தள செயற்பாட்டாளர்கள் முந்திக்கொண்டு பிறை தொடர்பில் பிழையான தீர்மானத்தை சமூக ஊடகங்கள் ஊடாக பரப்பி முஸ்லிம் சமூகத்தினரிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி, கொழும்பில் உள்ள பெரிய பள்ளிவாசல் மீதான பிறைக்குழுவை குற்றம் சாட்டி, முஸ்லிம் சமூகம் மத்தியில் கொழும்பு பெரிய பள்ளிவாசலுக்கும் பிறைக்குழுவுக்கும் எதிரான கருத்தியலை உருவாக்கி வந்தனர்.

இதனூடாக முஸ்லிம் சமூகத்தினரிடம் பிளவுபடுத்தும் கருத்தியல் மனப்பான்மையை உருவாக்கி, முஸ்லிம் சமூகத்திடம் பாகுபாட்டை உருவாக்குவதே அவர்களின் அடிப்படை நோக்கமாகும்.

கிழக்கிலும், தெற்கிலும், வடக்கிலும், மேற்கிலும் உள்ள முஸ்லிம்கள் அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஒரு சக்தியாக ஒன்றிணைய வேண்டிய இந்த நேரத்தில் அரசியல் கட்சிகள் மற்றும் மதக் கருத்தியல் பிரிவுகள் மூலம் முஸ்லிம் சமூகத்தை பிளவுபடுத்தி, இந்த ஒப்பந்த பிரிவினைவாத சித்தாந்தங்கள் மற்றும் கண்ணுக்கு தெரியாத அந்நிய சக்திகள் தனது அரசியல், மார்க்கக் கொள்கை, இயக்க வேறுபாட்டு நோக்கங்களை நிறைவேற்ற முயற்சிக்கும் போது இந்த நடவடிக்கைகளுக்கு முஸ்லிங்கள் ஒருபோதும் சோரம் போகக் கூடாது.

அமட்டுமின்றி இந்த விடயங்களில் மார்க்க, அரசியல் மற்றும் சிவில் தலைவர்கள் ஒன்றிணைந்து ஒரே சமூக கட்டமைப்பாக செயல்பட வேண்டும்!, என்றார்.

# பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளன!

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

பொருளாதாரத்தை மீட்பதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள சீர்திருத்தச் செயற்பாட்டின் மூலம் இலங்கை மக்கள் நல்ல பலன்களைப்பெற்று வருவதாகவும் எனினும் இதற்கு இருதரப்பு மற்றும் பலதரப்புப் பங்காளிகளின் ஆதரவை இன்னும் எதிர்பார்க்கிறோம், எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜி - 24 நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் உச்சி மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளதுடன், ஏற்றுமதி செயல்முறையை வலுப்படுத்தி, நேரடி வெளிநாட்டு முதலீட்டின் ஊடாக வெளிநாட்டுக் கடன்களைப் பெறாமல் பொருளாதாரத்தை புதிய வளர்ச்சிப் பாதைக்கு செலுத்தும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை 35 வீதத்திலிருந்து 70 வீதம் ஆக அதிகரிப்பதே இலங்கையின் இலக்காகும் என்றும் அவர் கூறினார்.

மேலும் இலங்கையை பொருளாதார நாடாக மாற்றுவதற்கான நாட்டின் திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், கடல்சார் இடம் சார்ந்த திட்டத்தை உருவாக்கும் பணியை இலங்கை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகவும், அதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

(04)

# சாவகச்சேரியில் தப்பிய கைதிகள் பொலிசாரால் மடக்கிப்பிடிப்பு!

யாழ் சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற வளாகத்தில் இருந்து தப்பியோடிய இரு கைதிகள் சுமார் 30 நிமிட இடைவெளியில் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருட்டு குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் கைதி ஒருவரும், விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரும், வழக்கொன்றுக்காக யாழ்ப்பாண சிறைச்சாலையில் இருந்து , சாவகச்சேரி நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்ட நிலையில் நீதிமன்ற வளாகத்தில் இருந்து தப்பியோடியுள்ளனர்.

அவர்களை சுமார் 30 நிமிட இடைவேளையில் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். அதனை அடுத்து , தப்பியோடிய இருவருக்கு தலா 6 மாத கால சிறைத்தண்டனை விதித்த சாவகச்சேரி நீதவான், ஆயிரத்து 500 ஷரூபாய் தண்டமும் விதித்தார்.

தண்டப் பணத்தினைக் கட்டத் தவறின் மேலும் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையை அனுவிக்க வேண்டும் எனவும் அவர் தீர்ப்பளித்துள்ளார். (04)









## நாஸாவில் கடமை புரிந்த இளம் விஞ்ஞானி மஹ்ரூப் புத்தளத்தில் காலமானார்

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

புத்தளம் நகரைச் சேர்ந்தவரும், அமெரிக்கா நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் கடமை புரிந்து வந்தவருமான இளம் விஞ்ஞானி மஹ்ரூப் ரொஸ்மின் (38 வயது) நேற்று செவ்வாய்க்கிழமை (16) புத்தளத்தில் காலமானார்.

புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவரான இவர் வானியற்புவியியல் துறையில் தேர்ச்சி பெற்றவர் என்பதுடன் அமெரிக்கா நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் கடமை புரிந்தும் வந்தவர்.

திடீர் சுகயீனமடைந்த நிலையில் சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்த இவரின் ஜனாஸா செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் புத்தளம் பகா பள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## சமூக சேவையாளர் கௌரவிப்பு



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

அலிவா சமூக நலன்புரி அமைப்பின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் சம்மாந்துறையில் இடம்பெற்றது.

இதன்போது, சமூக சேவையில் சிறப்பாக இயங்கிகொண்டிருக்கும் ஏ.ஜே. எம் சாதீக்கின் சேவையை பாராட்டி டலன்ட்ஸ் பிளஸ் டீவியின் ஸ்தாபக தலைவர் ரிஸான் முகம்மட் சில்ஹான் பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்வில் பொலனறுவை மாவட்ட நீர்ப்பாசன பொறியியளாளர் எம்.எஸ். எம் நவாஸ் மற்றும் சிரேஷ்ட கணக்காளர் எஸ்.ஏ ஜிப்ரி ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.04.2024இல் வெளியிடப்பெற்றது.